# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/26 - 2022 දෙසැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.01

*2308/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி.


1A - PG 6078 — 406 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் **"2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்"** என அழைக்கப்படும்.

2. 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2297/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொடுப்பனவு முறைமையின் மேலான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைமையின் மேலான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மேலும் இதன்மூலம் திருத்தப்படுகின்றன.

3. 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2297/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொடுப்பனவு முறைமையின் மேலான இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் விதியெண் 05 ஆல் அனுமதிக்கப்பட் கோழி தீவனம் உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்ட கோழி தீவன உற்பத்தியாளர்களுக்கு கோழி தீவன உற்பத்திக்கு அவசியமான **சோளம் (இயைபு முறைக் குறையீடு 1005.90.00) மற்றும் அவரையின உணவு வகை (இயைபு முறைக் குறையீடு 2304.00.00)** பொருட்களை விவசாய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ், திறந்த கணக்கு /சரக்கு கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் இலங்கைத் துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்தினை வந்தடையும் வகையில் இறக்குமதி செய்வதற்கான திகதியானது 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

4. மேலே ஒழுங்கு விதி இலக்கம் 03 இனை மோசடி செய்கின்ற எந்தவொரு இறக்குமதி தொடர்பாகவும் விவசாய விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளை இலங்கை சுங்கப் பணிப்பாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

EOG 12 - 0062

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.